எபிரெயருக்கு எழுதின நிருபம்

கிறிஸ்துவின் மேன்மை

ஆக்கியோன்

- எபிரேய நிருபத்தை ஆக்கியோன் யாரென்பது அறியப்படவில்லை.
- ஆக்கியோன் தீமோத்தேயுவை அறிந்திருந்தார் (13:23)
- ஆக்கியோன் இயேசுவை கண்களால் கண்டவரல்ல (பார்க்க 2:1,3)
- ஆக்கியோன் தன் வாசகர்களை அறிந்திருந்தார். அவர்களை மீண்டும் சந்திக்க விருப்பம் கொண்டிருந்தார் (13:19)
- ரோம பேரரசின் கிழக்கு பகுதிகளில் இருந்த சபைகள் இந்த நிருபத்தை பவுலே எழுதினதாக நம்பினார்கள்.
- பர்னபா இதை எழுதியதாக கருதுகிறவர்களும் உண்டு.
- பர்னபா ஆசாரிய கோத்திரமான லேவி கோத்திரத்தை சேர்ந்த ஒரு யூதர் (அப் 4:36). பவுல் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்தபின்பு அவருடைய நெருங்கிய நண்பராக இருந்தவர்.
- பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலின்படி அந்தியோகியாவிலுள்ள சபையார் பர்னபாவையும், பவுலையும் சுவிஷேசத்தை அறிவிப்பதற்காக முதலாவது மிஷனரிப்பயணத்திற்கு அனுப்பினார்கள் (அப் 13:1-4)
- இதை எழுதியது அப்பொல்லோ என்ற கருத்தும் உண்டு. இந்த கருத்தை முன்வைத்தவர் மார்ட்டின் லூத்தர்.
- அப்பொல்லோ, அலெக்ஸ்ண்டிராவில் பிறந்தவர். யூத கிறிஸ்தவரான இவர் அறிவுக்கும், வாதத்திறமைக்கும் பெயர்பெற்றவர்.
- லூக்கா இவரைக் குறித்து “சாதுரியவானும் வேதாகமங்களில் வல்லவனுமான அப்பொல்லோ” என்று குறிப்பிடுகிறார் (அப் 18:24)
- பவுல் ஆரம்ப நாட்களில் கொரிந்து சபையில் ஊழியம் செய்யும்போது அப்பொல்லோவும் அவருடன் ஊழியஞ்செய்திருக்கிறார் (1கொரி 1:12,3:4,6,22)
- கிபி 70 முன்பாக இது எழுதப்பட்டிருக்கவேண்டும் என்பதற்கான சான்றுகள் இருக்கின்றன.
- எருசலேம் ஆலயத்தின் அழிவு குறிப்பிடப்படவில்லை.
- ஆசாரியர்கள் இன்னும் பலிசெலுத்திக்கொண்டிருப்பதைபோல எழுதப்பட்டிருக்கிறது 8:4,10:11
    - அதிகாரங்கள் 13 வசனங்கள் 303

ஒரு விஷேசமான புத்தகம்

எபிரேயர் 13:22

சகோதரரே, நான் சுருக்கமாய் உங்களுக்கு எழுதின இந்தப் புத்திமதியான வார்த்தைகளை நீங்கள் பொறுமையாய் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்

- இது சுருக்கமாய் எழுதப்பட்டதாக சொல்லப்பட்டாலும், பல கிறிஸ்தவர்களால் வாசிக்கப்படாமல் தவிர்க்கப்படுவது இந்தப் புத்தகம்.
- பழைய ஏற்பாட்டில் - லேவியராகமம், புதிய ஏற்பாட்டில் - எபிரேயர்
- இது குழந்தைகளுக்கும், வசனத்தில் முதிர்ச்சியற்றவர்களுமான புத்தகம் அல்ல 5:11-14
- இந்த மெல்கிசேதேக்கைப்பற்றி நாம் விஸ்தாரமாய்ப் பேசலாம்; நீங்கள் கேள்வியில் மந்தமுள்ளவர்களானபடியால், அதை விளங்கப்பண்ணுகிறது அரிதாயிருக்கும். காலத்தைப் பார்த்தால், போதகராயிருக்கவேண்டிய உங்களுக்குத் தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்கவேண்டியதாயிருக்கிறது;
- நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத்தக்கவர்களானீர்கள். பாலுண்கிறவன் குழந்தையா யிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான்.
- பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சிசெய்யும் ஞானோந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்.
- தவறாக வழிநடத்தப்பட்ட இறையியலாளர்கள் எபிரேயர் (ரோமருக்கு எழுதின் நிருபம் சேர்ந்து) பழைய எற்பாட்டை புறக்கணிப்பதாக சொல்லுகிறார்கள். ஆனால் அது தவறு.
- இவை இரண்டிலும்தான் பழைய ஏற்பாட்டிலிருந்து அதிக மேற்கோள்கள் காட்டப்பட்டுள்ளன.
- ரோம நிருபத்தில் (84 பழைய ஏற்பாட்டுப் பகுதிகள்)
- எபிரேயரில் (83 பழைய ஏற்பாட்டுப் பகுதிகள்)
- கிருபையின் சுவிஷேசத்தை அறிவதற்கு பழைய ஏற்பாட்டிற்கும், புதிய ஏற்பாட்டிற்கு மிடையேயுள்ள தொடர்பை அறிந்திருப்பது அவசியம்.
- அப்பொழுதுதான் தவறான உபதேசங்களுக்குள் புறஜாதியாரை நடத்தும் யூதர்களின் கள்ள உபதேசங்களை தவிர்க்க முடியும்.

கிறிஸ்துவே உயர்ந்தவர்

1. கிறிஸ்துவின் மேன்மை – 1:1-8:6

- தீர்க்கதரிசிகளிலும் மேலானவர்: மிகச் சிறந்த செய்தித்தொடர்பாளர் 1:1-3
- தூதர்களிலும் மேலானவர்: தெய்வீகம் மற்றும் மனிதப் பண்பு 1:4-2:18
- மோசேயிலும் மேலானவர்: இவரோ பரலோக இளைப்பறுதலை தருகிறவர் 3:1-4:13
- ஆரோனிலும் மேலானவர்: இவரது ஆசாரித்துவம் மேலானது 4:16-8:6

2. புதிய உடன்படிக்கையின் மேன்மை – 8:7-10:18

- இது மேலான வாக்குத்தத்தங்களைக் கொண்டது 8:7-13
- இது மேலான பரிசுத்தஸ்தலத்தை கொண்டது 9:1-28
- இத மேலான பலியைக் கொண்டது 10:1-18

எபிரேயரில் காணப்படும் எச்சரிக்கைகள்

1. புறக்கணித்தலைக் குறித்த எச்சரிக்கை - 2:1-4
   * புறக்கணிப்போமானால் இலகுவில் விலகிப்போய்விடுவோம்
   * நாம் கேட்டவற்றை ஜாக்கிரதையாக கைக்கொள்வதே இதற்கான தீர்வு
2. விட்டு விலகுவதைக் குறித்த எச்சரிக்கை - 3:12-15
   * பாவத்தினால் வஞ்சிக்கப்பட்டு இருதயம் கடினமாகி விசுவாசக் குறைவு ஏற்பட்டு ஜீவனுள்ள தேவனை விட்டு விலக நேரிடலாம்
   * நாள்தோறும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லி உறுதியாய் இருப்பதே இதற்கான தீர்வு
3. கீழ்ப்படியாமை குறித்த எச்சரிக்கை - 4:11-13
   * வனாந்தரத்தில் இஸ்ரவேலரைப்போல நாம் கீழ்ப்படியாமையாலே இளைப்பாறுதலுக்குள் பிரவேசியாமல் போய்விடுவோம்
   * கர்த்தருடைய வார்த்தையை ஜாக்கிரதையுடன் கவனித்தலே இதற்கான தீர்வு.
4. கேள்வியில் மந்தம் குறித்த எச்சரிக்கை - 5:11-6:6
   * கேள்வியில் மந்தமாயிருத்தல் கிறிஸ்துவுக்குள் நமக்கு இருக்கும் ஆசீர்வாதங்களை குறித்து மேன்மைபாராட்டுவதை கடினமாக்குவதோடு தேவனுடைய குமாரனை மீண்டும் சிலுவையில் அறையும் அளவிற்கு கீழான நிலைக்குச் சென்று விடுவோம்.
   * தேவனுடைய வசனத்தின் முதலாவது நியமங்களை பற்றிப்பிடித்தவர்களாய் ஆவிக்குரிய முதிர்வையும், பரிபூரணத்தையும் நோக்கி முன்னேறிச் செல்வதே இதற்கான தீர்வு.

எபிரேயரில் காணப்படும் எச்சரிக்கைகள்

5. இழிவாக கருதுவதைக் குறித்த எச்சரிக்கை - 10:26-39
    - பாவங்களுக்கான பலிசெலுத்துதல் இல்லையென்பதாலும், பயங்கரமான தண்டனை மாத்திரமே உண்டென்பதாலும் தேவனுடைய கிருபையை இழிவாய் கருதிவிடக்கூடும்.
    - கிறிஸ்துவில் நம்பிக்கையாயிருந்து, நீடித்த பொறுமையோடு விசுவாசிப்பதே இதற்கான தீர்வு.
6. மீறுதல் குறித்த எச்சரிக்கை – 12:25-29
    - இப்போது பரலோகத்திலிருந்து பேசுகிறவருக்கு செவிகொடுக்க மறுக்கக்கூடும்.
    - உத்தமமாய் தேவனுடைய கிருபையை நோக்கிப் பார்த்து, பயத்தோடும் பக்தியோடும் அவருக்கு பிரியமாய் ஆராதனை செய்வதே இதற்கான தீர்வு.

எபிரெய நிருபத்தின் முக்கிய பகுதிகள்

- முன்னுரை : தேவனுடைய புதிய வெளிப்பாட்டின் உயர்வு 1:1-4
- பழைய ஏற்பாட்டின் முக்கிய நபர்களிலும் கிறிஸ்துவின் மேன்மை 1:5-7:28
  - கிறிஸ்து தூதர்களிலும் மேலானவர் 1:5-2:18

1. அவரது உயர்வு குறித்து வேதவசன நிரூபணங்கள் 1:5-14
2. தேவன் தமது குமாரன் மூலமாய் வெளிப்படுத்தியதை அலட்சியப்படுதாமல் இருக்க அறிவுரை 2:1-4
3. இயேசு தூதர்களிலும் சற்று சிறியவராக்கப்பட்டார் 2:5-9
4. இயேசு நம்மைப்போலாக்கப்பட்டதால், நம்மை இரட்சிக்க வல்லவரானார் 2:10-18

- கிறிஸ்து மோசேயிலும் மேலானவர் 3:1-4:13

5. கிறிஸ்துவின் மேன்மையின் வெளிப்பாடு 3:1-6
6. இரட்சிப்பின் இறப்பாறுதலுக்கள் பிரவேசிக்க அறிவுரை 3:7-4:13

- கிறிஸ்து ஆரோன்வழி ஆசாரியர்களிலும் மேலானவர் 4:14-7:28

1. இயேசுவே பெரிய பிரதான ஆசாரியர் 4:14-16
2. ஆசாரியனின் தகுதிகள் 5:1-10
3. முதிர்ச்சியை நோக்கி முன்னேற அறிவுரை 5:11-6:12
4. தேவனுடைய வாக்குத்தத்ததின் நிச்சயம் 6:13-20
5. ஆசாரியர்களின் முறைமைகளில் கிறிஸ்துவின் மேன்மை அதி7

எபிரெய நிருபத்தின் முக்கிய பகுதிகள்

- நமது பிரதான ஆசாரியரின் பலியாகும் பணியின் மேன்மை 8:1-10:18
- புதிய கூடாரமும், புதிய உடன்படிக்கையும் அதி 8
- பழைய கூடாரம் 9:1-10
- மேன்மையான பலி 9:11-10:18

- உண்மையோடும், விடாமுயற்சியோடும் இயேசுவை பின்பற்ற அழைப்பு 10:19-12:29
  - பரிசுத்தஸ்தலத்திற்குள் பிரவேசிக்கும் நம்பிக்கை 10:19-25
  - பாவத்தில் தொடர்ந்து இருத்தல் குறித்து எச்சரிக்கை 10:26-31
  - அழுத்தத்தின் மத்தியிலும் விசுவாசத்தில் உறுதியாய் இருத்தல் 10:32-12:3

1. பழையநாட்களில் இருந்ததைபோலவே எதிர்காலத்திலும் 10:32-39
2. விசுவாசமும் அதன் அருமையான எடுத்துக்காட்டுகளும் அதி 11
3. இயேசுவே மேலான எடுத்துக்காட்டு 12:1-3

  - உபத்திரவ சூழ்நிலைகளிலும் தொடர்ந்து முன்னேற உற்சாகமூட்டல் 12:4-13
  - பரிசுத்த ஜீவியம் குறித்த அறிவுரை 12:14-17
  - ஊக்குவிப்பும் எச்சரிப்பும் 12:18-29

- முடிவுரை அதி 13
  - கிறிஸ்தவ ஜீவியத்திற்கான ஒழுங்குகள் 13:1-17
  - ஜெபத்திற்கான விண்ணப்பம் 13:18-19
  - ஆசீர்வாதம் 13:20-21
  - தனிப்பட்ட குறிப்புக்கள் 13:22-23
  - வாழ்த்துக்களும் இறுதி ஆசீர்வாதமும் 13:24-25